**<u>முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>**

அசல் வழக்கு எண்.174/2022 இ.ம.எண்.

எம்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 21–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.3–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை. பிரதிவாதி தோன்றா தரப்பினர் ஆவார். வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முத்துகிருஷ்ணன் | மாவட்டம் | : |
| த/பெ.பெயர் | : கோவிந்தராஜ் | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

<u>முதல் விசாரணை</u> <u>தொடர்ச்சி</u>

1. டி.எஸ்.என்.12 எந்த வீதியில் அமைந்துள்ளது என்றால் பெரியார் வீதியில் அமைந்துள்ளது. மேலும் தாவா 1 அயிட்டம் சொத்தான ஓட்டுவீடு ஆகும். மேற்படி அந்த ஓட்டுவீடு ராமசாமிநாயுடு மகள் முனியம்மாள் மற்றும் மாரிமுத்து மகள் தியாகராஜன் பெயரில் உள்ளது. டி.எஸ்.என்.13 மேற்கண்ட வீதியில் அமைந்துள்ளது. அது தாவா 2வது அயிட்ட சொத்தாகும்.அதில் ஓட்டுவீடும், கிணறும் அமைந்துள்ளது.

2. வெங்கடஜலபதி மகன் முனிராஜ் மற்றும் வெங்கடஜலபதி மகன் ரங்கராஜ் மற்றும் முனிராஜ் மனைவி கௌரி ரூக்மணி ஆகியோர் பெயரில் மேற்கண்ட தாவா 2ஆவது அயிட்ட சொத்து வகைப்பாடாகி உள்ளது. மேற்படி வகைப்பாடு செய்யப்பட்டுள்ள நபர்கள் முந்தைய உரிமையாளர்களாக அல்லது தற்போது உள்ள உரிமையாளர்களா என்றால் என்னால் சொல்ல இயலாது.

3. மேற்படி டி.எஸ்.என்.12 மற்றும் டி.எஸ்.என்.13க்குரிய ஈரோடு நகரநிலவரிதிட்டம் ஆவணத்தை சாட்சிய சான்று ஆவணமாக 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( உண்மை நகல்)